GEMS
யுத்த சத்தம்
ஆச்சரியங்களின் ஆண்டு !
Vol : 24
Issue : 4
ஏப்ரல் 2011
அறுப்பு மிகுதி;
வேலையாட்களோ கொஞ்சம் ;
(மத். 9:37)
ஆண்டு சந்தா ரூ.100/-
தனிப்பிரதி ரூ.10/-

சகோ.காலேப் - நான்சி

பாண்டிச்சேரியைச் சேர்ந்த சகோதரர் இந்துக் குடும்பத்தில் பிறந்து இந்து பாரம்பரியங்களில் பக்தி வைராக்கியமாக வளர்க்கப்பட்டவர். சிறு வயதில் விடுமுறை வேதாகமப் பள்ளிக்குச் சென்றதின் விளைவாக இயேசுவின் அன்பினை அறிந்திருந்தபோதிலும், வாலிப வயதில் கிறிஸ்துவுக்கு விரோதமாக செயல்பட்டு, ஆலயங்களையும் கற்களை வீசி தாக்கியவர். 1995-ம் ஆண்டு அண்டை வீட்டு சகோதரர் ஒருவர் மூலமாக ஜெபக்குழு ஒன்றில் இணைந்து இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். ஓவியம் வரைவதில் திறமைமிக்க சகோதரர், சினிமா துறையில் கட் அவுட் வரைந்துகொண்டிருந்தார். சினிமா துறையினை விட்டு வெளியே வரும்படி ஊழியர் ஒருவர் கொடுத்த ஆலோசனை-யினை ஏற்றுக்கொண்டு, சினிமா துறையினை விட்டு வெளியேறி பல்வேறு தனியார் கம்பெனிகளில் பணிசெய்யும்படிக்குச் சென்றார். எல்லா தனியார் கம்பெனிகளிலும் வேலைகளைத் தொடங்குவதற்கு முன்பாக விக்கிரக வணக்கம் செய்யப்படுவதைக் கண்டு வெறுப்புற்று, சபை ஒன்றில் பணியாற்றிவந்தார். சகோதரர். **அகஸ்டின் ஜெபக்குமார்** அவர்களின் செய்திகளைக் கேட்டு 2005-ம் ஆண்டு பீஹார் பணித்தளங்களை காணும்படி வந்த சகோதரர் தொடர்ந்து ஜெம்ஸ் ஊழியத்துடன் தன்னை இணைத்துக்கொண்டார்.

கேரளா இடுக்கி மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரி கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவர். 13 வயதில் கன்வென்ஷன் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டதின் விளைவாக இரட்சிக்கப்பட்டார். தொடர்ந்து 2 ஆண்டுகள் கோயம்புத்தூரில் வேதாகமக் கல்லூரியில் சேர்ந்து பயின்று, பின்னர் அங்குள்ள சபை ஒன்றில் இணைந்து ஊழியம் செய்துவந்தார். அச்சபையின் போதனைகள் வேதத்திற்கு முரண்பாடாக காணப்பட்டதால் அங்கிருந்து வெளியேறினார். ஊழியர்களின் வாழ்க்கைக்கும் ஊழியத்திற்கும் சம்பந்தமே இல்லாததைக் கண்டு மனம் நொந்தார். 2000-ம் ஆண்டு கோயம்புத்தூர் மிஷனெரி பெருவிழாவில் பங்கேற்றபோது மிஷனெரியாக தன்னை அர்ப்பணித்தார். “நீதான் எனக்கு வேண்டும்” என்ற சகோ-காதரர் **அகஸ்டின் ஜெபக்குமார்** அவர்களின் ஒலிநாடா செய்தியைக் கேட்டு பீஹாருக்கென்று தன்னை அர்ப்பணித்தார். 2005-ம் ஆண்டு பீஹாருக்கு புறப்பட்டுச் சென்று ஜெம்ஸ் ஊழியத்துடன் தன்னை இணைத்துக்கொண்டார். 2009-ம் ஆண்டு மே 20 அன்று சகோதரருடன் இல்லர வாழ்வில் இணைக்கப்பட்டார். சகோதரர் தற்போது சிறுவர் துறையிலும், சகோதரி பிரேம்சாகர் “ஜெம்ஸ் இல்லத்திலும் கிறிஸ்துவின் பணியினை நிறைவேற்றிவருகின்றனர். இவர்களது ஊழியங்களுக்காகவும், மகள் ஆலிவெட்(வயது 8 மாதம்)க்காகவும் ஜெபிப்போம்.

அன்பின்மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான ஜெப பங்காளரே,

நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? (மத்.5:47)

நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணக்கூடாதவருமாயிருக்கிற(1தீமோ6:15,16) உலகரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் நம்மிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறார் நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? பரிசேயர் சதுசேயர், வேதபாரகர்கூட்டத்தினரிடம் என் அன்பு தேவன் கேட்ட கேள்விகளுக்கு அவர்களால் பதிலளிக்க இயலவில்லை ஒரு கணம் நம்முடைய சிந்தையை ஒருமனப்படுத்துவோம். திணறுகிறது உள்ளம். திகைக்கிறது நெஞ்சம். நம்முடைய தலை கவிழ்கிறது. தலை கவிழலாமா? **என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்(சங் 23:5) தம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களைக் கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினவருக்கு(வெளி.1:6)** முன்பாக நாம் தலைகவிழ்வது எப்படி? முழங்கால்களை முடக்குவோம். கண்ணீரைச்சிந்துவோம். அவருடைய கிருபைக்காய் மன்றாடுவோம். நம்முடைய இயலாமையை நிரப்ப அவர்வல்லவராயிருக்கிறார். அல்லேலூ

யா! விசேஷித்து செய்தவர்கள் அன்றும் உண்டு. இன்றும் இருக்கிறார்கள். இன்று உள்ளவர்களைக் குறித்து எழுதுவது நல்லதல்ல. அவர்களும் விரும்பமாட்டார்கள். தேவனும் அதில் பிரியமாயிறார்.

வேதப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள இரண்டு நபர்களை மட்டும் தியானிப்போம். முதலாவதாக நோவா. இந்தப்பெயரை அறியாத எவரும் இருக்க மாட்டார்கள் ஞாயிறு பள்ளிகளிலோ அல்லது கிராமம் கிராமமாக சிறுவர்மத்தியிலே ஊழியம் செய்வோர் வாயிலாகவோ அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. **கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டான வேலையிலும் நம்முடைய கைகளின் பிரயாசத்திலும் இவன் நம்மைத் தேற்றுவான்**(Comforter)என்று நம்பி அவனுக்கு நோவா என்று பெயரிட்டதாக வேதாகமம் நமக்கு காண்பிக்கிறது(ஆதி 5:29) இந்த உலகமே அழிக்கப்படும். ஆனால் லாமேக்கினுடைய மகனும், அவனுடைய மனைவியும், மூன்றுகுமாரர்களும், குமாரர்களின் மனைவிகளும் தப்பிவிக்கப்பட்டு, அவனுடைய சந்ததி மூலமாகவே. இன்னுமொரு புதிய சந்ததி உறுவாக்கப்படும் என்று லாமேக்கு அறியமாட்டானே. பெயர் என்ற உடனே எனக்கு சகரியா, எலிசபெத்துதம்பதியினர் ஞாபகம் தான் வருகிறது. வயதான காலத்திலே தேவ திட்டத்தின்படி அவர்களுக்கு பிறந்த மகனுக்கு தேவனிட்ட பெயர் "யோவான்" அதில் அவர்கள் உறுதியாக இருந்தபோது அருகில் இருந்தோர் உன் உறவின் முறையாரில் இந்த பெயருள்ளவன் ஒருவனும் இல்லையே. (லூக்:1:61) என்றனர். இன்றோ பெயர்கள் என்ன நிலையில் விடுகிறார்களோ? சிரிப்புதான் வருகிறது.

நோவாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. (ஆதி.6:8) இன்று பிள்ளைகள் பெற்றோரை தேற்றுக்கின்றனரா? தேடவைக்கின்றனரா? ஆதரவு அளிக்கின்றனரா? அல்லது அழவைக்கின்றார்களா? முதியோர் இல்லங்களுக்கு கணக்கில்லையே. அன்பு தாழ்ச்சியாகிவிட்டது. **பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள் இது நியாயம்**(எபே.6:1)நோவா குடும்பத்தை தேற்றுகிறவன்(Comforter) கர்த்தருடைய கண்களில் கிருபை பெற்றவன்.(Found Grace in the Eyes of God) காணாததை விசுவாசித்த பாக்கியவான்(Blessed) அவன் ஒரு நீதிமான்(Just) உத்தமன்(Perfect) தேவனோடு சஞ்சரித்து கொண்டிருந்தவன்.(Walked with God) தேவன்

இன்னோரு முறை மண்ணினாலே மனிதனை உருவாக்கப் போவது இல்லை. தேவன் நோவாவுக்கு கட்டளையிட்டார்.(Commanded him) அவன் கீழ்ப்படிந்தான்(He Obeyed) நேவாவை பேழையை உண்டு பண்ணச்சொன்னார். அதை இன்ன இன்னபடி செய்ய வேண்டும் என்று தன்னுடைய திட்டத்தையும் பேழையின் மாதிரியைக் காண்பித்துக் கொடுத்தார். தேவன் தனக்கு எப்படிச் சொன்னாரோ அப்படியே செய்தான்(He did so) இன்றும் நாம் காண்கின்ற, நம்மால் காணக்கூடாத உயிரினங்கள் பூமியிலே இருப்பதற்கு நோவா முக்கிய காரணம் அன்றோ. சர்வ வல்லவர் அவனைத்தானே பயன்படுத்தினார். நோவா விசேஷித்தவன். அவன் விசேஷித்துச் செய்தான். இன்று நம்மை காக்கும் பேழை இயேசு தானே. அவருக்கு நன்றியோடு இருக்கிறோமோ? அல்லது அவருக்குத் துரோகம் செய்கிறோமோ? நம்முடைய இருதயமே பதில் சொல்லட்டும். வாசிக்கின்ற தேவ ஜனமே நாம் விசேஷித்துப் படைக்கப்பட்டவர்கள். அல்லவா? மறந்துவிடவேண்டாம்.

அடுத்த நபர் மொர்தெகாய். நேபுகாத் நேச்சாரால் சிறைப்பிடிக்கப்பட்டு தாயகம் திரும்பி வந்தவன். தாய், தகப்பனை இழந்த தனது சிறிய தந்தையின் மகள். எஸ்தருக்காக தன் வாழ்க்கையையே தியாகம்(sacrifice) செய்தவன். அவளையே தன் மகளாக எண்ணி பராமரித்து வந்தவன். இவன் ராஜப்பரம்பரையில் பிறந்தவனா? இல்லை. பிரபுக்கள் பட்டியலில் இடம் பெற்றவனா? இல்லவே இல்லை. ஆனால் வைராக்கியம் உள்ள யூதன்(Jew) தேவ வழி நடத்துதலை அறியும் போது மெய் சிலிர்க்கின்றது. உள்ளம் பூரிக்கின்றது **தகப்பனே உமக்கு கோடி ஸ்தோத்திரம்.** பட்டத்து ராணியாகிய “வஸ்தி” தான் கீழ்ப்படியாமையால் தன் பதவியை இழந்தாள். வெறுமையாக்கப்பட்டாள். அவள் வெகு அழகுள்ளவள். வேதம் அப்படித்தான் கூறுகிறது. ஆனால் கீழ்ப்படிதல் இல்லையே? அழகும் மாயை, பதவியும் மாயையே. உணருகிறோமா? உதாசீனம் செய்கிறோமா. **லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்** என்று (லூக்.17:32) வேதம் நம்மை எச்சரிக்கின்றது. எஸ்தர் பட்டத்து ராணியாகிவிட்டாள். தேவனுடைய கிருபையே. ஆபிரகாமுக்கு வாக்களித்தவராயிற்றே.(ஆதி.22:18) வாக்குமாறாதவரும் கூட. தன்னை மொர்தெகாய் மதிக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஆமான் யூதகுலத்தையே அழிக்கத் திட்டமிட்டு இராஜாவிடமிருந்து ஆணையும் பெற்றுவிட்டான். அரண்மனையில்

அவனை கண்டுவணங்காதோர் இல்லையே. இராஜாவின் கட்டளையும் அதுவே. யூத குலத்திலே தானே உலக ரட்சகராம் "**இயேசு**" வரவேண்டும். இதை ஆமானால்தடுத்து நிறுத்த முடியுமா? அப்பப்பா என்ன பெருமை. மொர்தெகாயை தூக்கிலிட ஐம்பது முழ உயரம் உள்ள தூக்கு மரத்தையும் செய்து விட்டான். அகந்தை உள்ளவன். ராஜாத்தி எஸ்தரும் அவள் தோழிகளும் மொர்தெகாயும் அனைத்து யூதர்களும் மூன்று நாட்கள் உபவாசித்தனர். தேவன் செயல்படக்கூடிய வேளை வந்தது. **அவர் (ஜீவனுள்ள தேவன்) சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாய் செய்திருக்கிறார்.**(பிர.3:11) ராஜாவாகிய அகாஸ்வேருவின் நித்திரையைத்தடை செய்தார். காலவர்த்தமான புத்தகம் வாசிக்க தன் உயிரைக் காத்தவன் மொர்தெகாய் என்று அறிந்து அவனை கனப்படுத்தவும் செய்தான். ராஜாத்தியாகிய எஸ்தரும் தனது கணவரும் ராஜாவுமாகிய அகாஸ்வேருவின் பாதங்களில் விழுந்து அழுது ஆமானின் தீய திட்டமாகிய யூதரை அழிக்கும் செயலை வெளிப்படுத்தி '**என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப்பார்க்கக் கூடும். (எஸ்.8:6)** ராஜாவாகிய ஆகாஸ்வேரு வீறு கொண்டான். ஆமானும், அவன் பத்து குமாரரும் யூதர்களின் எதிரிகள்." (எஸ்.8:6) அனைவரும் அழிக்கப்பட்டனர் மொர்தெகாய் உயர்த்தப்பட்டான். தன் திரளான சகோதரர்களுக்கு பிரியமானவனுமாயிருந்ததும் அன்றி தன் ஜனங்களுடைய நன்மையை நாடி தன் குலத்தாருக்கெல்லாம், சமாதானம் உண்டாக பேசுகிறவனுமாயிருந்தான். (எஸ்.10:3) நியாயாதிபதி வாசலருகே வந்துவிட்டார். கலங்க வேண்டாம். துணிகரம் கொள்ளவும் வேண்டாம். பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உண்டா? (யோவான்.21:5) அன்போடு கேட்கிறார் இயேசு. தேவ கரத்தில் பரிபூரணமாய் ஒப்புக்கொடுப்போம். நம்மை விசேஷித்து செய்கிறவர்களாக மாற்றுவார். ஆமென்.



அன்பரின் பணியில்
அன்பு சகோதரன்,
T.சாம்ராஜ்

யுத்தம் கர்த்தருடையது

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது.(1கொரி 10:11)

பாவத்திற்கு அடையாளமாக, சாபத்திற்கு அடையாளமாக, சாத்தானுடைய ஆளுகைக்கு அடையாளமாக இருக்கிற எகிப்த்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தர் வேறு பிரித்து வனாந்தரத்திற்குள் நடத்தி அவர்களுக்கு வாக்குப் பண்ணியிருந்த பாலும் தேனும் ஓடுகின்ற கானானுக்குள் கொண்டுபோய் சேர்த்தார். இஸ்ரவேல் மக்கள் கானானுக்குள் பிரவேசிக்கும் முன்னதாகவே, அதனைச் சுதந்தரிக்கும் முன்னதாகவே ‘‘நான் மோசேக்கு சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்’’ (யோசு 1:3) என்று தேவன் சொல்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கையிலே, அநேக வாக்குத்தத்தங்களை நாம் சுதந்தரிக்கும்படியாக தேவன் முன்னதாகவே நமக்கு வாக்குக் கொடுக்கின்றார். நாம் தேசத்தை சுதந்தரிக்கவேண்டும் என்பதும் தேவனது திட்டம். தேவன் இரண்டு முக்கிய நோக்கங்களுடன் நாம் செயல்படவேண்டும் என விரும்புகின்றார். ஒன்று தேவன் நமக்குக் கொடுத்திருக்கின்ற வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்கவேண்டும், இரண்டாவது நாம் வைக்கப்பட்டிருக்கின்ற பூமியை தேவனுக்கென்று நாம் சுதந்தரிக்கவேண்டும். எந்த கிறிஸ்தவன் இந்த காரியத்தை செயல்படுத்தவில்லையோ, அவன் ஆண்டவருடைய திட்டத்தை மறந்துவிட்டவனாக, அதனை மறுதலிப்பவனாகவே காணப்படுவான். பாவத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி, வனாந்தரத்திற்குள் நடத்தி, வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பதற்காக, தேசத்தை சுதந்தரிப்பதற்காக நம்மை அழைக்கிறார். வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்கும்போது நமக்கு போராட்டங்கள் உண்டு. ‘‘கானான் தேசத்தை உங்களுக்குக் கொடுத்தேன்’’ என்ற கர்த்தர் சொல்லியிருந்தாலும், அதனைச் சுதந்தரிப்பதற்கு அவர்கள் கட்டாயம் யுத்தம் செய்யவேண்டும். தேவன் நம்முடைய யுத்தங்களை நடப்பிக்கிறவர்; அவருடைய நாமம் ‘சேனைகளின் கர்த்தர்’ என்பது.

> தேவன் நம்முடைய யுத்தங்களை நடப்பிக்கிறவர்; அவருடைய நாமம் **‘‘சேனைகளின் கர்த்தர்’’** என்பது

கர்த்தரின் பட்சத்தில் நிற்கிறவர்களோடேயே கர்த்தர் நிற்கிறார்

> **ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.(எபே 6:12-13)**

கிறிஸ்தவ வாழ்க்கையில் யுத்தங்களை நாம் நிச்சயம் சந்திக்கவேண்டும், அவைகளை நாம் தவிர்க்கமுடியாது. கண் காணாத யுத்தங்கள் நமது வாழ்க்கையில் அநேகம் உண்டு. யுத்தங்கள் நாம் தோற்றுப் போவதற்கு அல்ல, தேவன் நமக்குக் கொடுத்திருக்கின்ற வாக்குத்தத்தங்களைச் சுதந்தரிப்பதற்கும், தேசத்தைச் சுதந்தரிப்பதற்குமே. இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, அவர்களுக்கு யுத்தத்தைக் குறித்து எதுவும் தெரியாது, அவர்களது கைகள் செங்கல் அறுத்த கைகளே. யுத்தத்தைக் கண்டால் அவர்கள் மனமடிந்துபோவார்கள் என்றே தேவன் அவர்களை பெலிஸ்தியர் தேசத்தின் வழியாக நடத்திச் செல்லாமல் வனாந்தரத்தின் வழியாக சுற்றி நடக்கப்பண்ணினார். எகிப்திலிருந்து அவர்கள் வந்தபோது அவர்களுக்கு என்ன பெலம் இருந்தது என்பதை தேவன் அறிந்திருந்தார்; நமது பெலனை தேவன் நன்கு அறிந்தவர் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் விழுந்துவிடக்கூடாது, ஓடிவிடக்கூடாது, பின்வாங்கிவிடக்கூடாது, தளர்ந்துவிடக்கூடாது என்பதில் தேவன் கவனமுள்ளவராகவே இருக்கின்றார். தேவன் நம்மை நடத்திச் செல்வதை நாம் புரிந்துகொண்டால், வாழ்க்கையில் அதிசயங்களை நாம் காணமுடியும். யோர்தானைக் கடந்து கானானுக்குள் செல்ல அவர்கள் ஆயத்தமாயிருந்தபோது, அடைக்கப்பட்ட எரிகோ பட்டணம் அவர்களுக்கு முன்னதாக நின்றது. தேவன் நமக்காக யுத்தம் செய்கிறவர் மாத்திரமல்ல, யுத்தத்தையும் நமக்குக் கற்றுக்கொடுக்கிறவர். ஜெபம் செய்ய எங்களுக்கும் கற்றுத்தாரும் என்ற சீஷர்கள் இயேசுவினிடத்தில் கேட்டபோது, மாதரியான ஒரு ஜெபத்தை இயேசு அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். எதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும், என்ன கேட்கவேண்டும், யாரிடத்தில் கேட்கவேண்டும் என்று இயேசு சீஷர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். உணவிற்கும், ஆடைகளுக்கும் முதலிடமல்ல தேவனுடைய ராஜ்யத்திற்கே முதலிடம் என்பதை இயேசு கற்றுக்கொடுத்தார். ஆனால், நாம் நமது ஜெபங்களில் நமது தேவைகளுக்கு முதலிடம் கொடுத்துவிடுகின்றோம்.

எரிகோ அடைக்கப்பட்டிருந்தது, எரிகோவின் மதில்கள் மிகவும் பெரிதானதாயிருந்தது. அந்த எரிகோவை தகர்க்க யுத்த முறையினை தேவன் கற்றுக் கொடுத்தார். நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களிலும் நாம் வெற்றிபெற தேவன் கற்றுத்தரும் முறைகளை நாம் கையாளவேண்டியது அவசியம்.

பின்னும் யோசுவா எரிகோவின் வெளியிலிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, ஒருவர் அவனுக்கு எதிரே நின்றார். உருவின பட்டயம் அவர் கையில் இருந்தது; யோசுவா அவரிடத்தில் போய்: நீர் எங்களைச் சேர்ந்தவரோ, எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ என்று கேட்டான்.(யோசு 5:13)

நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் போராட்டங்களிலும் நாம் வெற்றிபெற தேவன் கற்றுத்தரும் முறைகளை நாம் கையாளவேண்டியது அவசியம்.

நாம் யுத்தத்தைச் சந்திப்பதற்கு முன்னதாகவே யுத்தத்தைச் சந்திப்பதற்கு தேவன் ஆயத்தமாயிருக்கின்றார். “நீர் எங்களைச் சேர்ந்தவரோ, எங்கள் சத்துருக்களைச் சேர்ந்தவரோ” என்று யோசுவா கேட்டபோது, அவர் ‘அல்ல, நான் கர்த்தருடைய சேனையின் அதிபதியாய் இப்பொழுது வந்தேன் என்றார் (யோசுவா 5:14)’ என்றே உத்தரவு சொன்னார். தேவனது பக்கத்தில் யார் நிற்கிறார்களோ அவர்களது பக்கத்தில் தேவன் நிற்கிறார், அவர்களுக்காக அவர் யுத்தம் செய்கிறார். எந்த சபையில் கர்த்தர் இருக்கிறார், அந்த சபையில் இருக்கிறாரா அல்லது இந்த சபையில் இருக்கிறாரா என்று பலர் குழப்பமடைகிறார்கள். எந்த சபை கர்த்தரோடு இருக்கிறதோ அந்த சபையோடே கர்த்தர் இருக்கிறார். மோசே சீனாய் மலையிலிருந்து இறங்கிவந்தபோது, ‘இஸ்ரவேல் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள், நான் அவர்களை அழிக்கப்போகிறேன், நீ சீக்கிரம் புறப்பட்டுப் போ’ என்று தேவன் மோசேயினிடத்தில் சொன்னார். தேவனது பிரசன்னத்தை உணர்ந்திருந்த இஸ்ரவேல் ஜனங்கள், மலையில் மேகத்தின் மத்தியில் தேவ பிரசன்னம் காணப்பட்டபோதிலும், தங்களுக்கு தெய்வங்களாகக் கன்றுக் குட்டிகளை உண்டாக்கிக்கொண்டார்கள். மோசே கர்த்தரைச் சந்திக்க மலையில் ஏறிச் சென்றிருந்தபோது, கீழே ஜனங்கள் மோசேக்கு என்ன நடந்ததோ அறியோம் எனவே எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை உண்டாக்கும் என்று சொன்னார்கள். அப்போது ஆரோன், உங்கள் காதுகள் கழுத்துகளில் உள்ள ஆபரணங்களைக் கொண்டுவரச் சொல்லி கன்றுக்குட்டியினை உண்டாக்கி அவர்கள் வணங்கும்படிச் செய்தான். ஆரோனுக்குக் காணிக்கைக் கொடுத்தால் அவன் கன்றுக்குட்டியையே உண்டாக்குவான். கர்த்தருக்குப் பண்டிகை என்று சொல்லிக்கொண்டு

கர்த்தருக்கு விரோதமான காரியங்களே நடைபெற்றன. மோசேக்கு காணிக்கை கொடுத்தால் அவன் ஆசரிப்புக் கூடாரத்தை உண்டாக்குவான், அங்கே தேவ மகிமை தங்கும். யாருக்கு காணிக்கை கொடுக்கவேண்டும் என்பதில் கூட நாம் கவனமாயிருக்கவேண்டும்.

இஸ்ரவேல் மக்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டபோது, ஆண்டவருடைய கோபத்தை தனது கோபமாக்கிக்கொண்டு மோசே மலையிலிருந்து இறங்கி வந்தான். தன் கைகளிலிருந்த தேவன் கொடுத்திருந்த இரண்டு கற்பலகைகளை அவன் உடைத்துப்போட்டான். ஆரோன் உண்டாக்கியிருந்த கன்றுக்குட்டியினை மோசே சுட்டெரித்தான், அதனை பொடியாக்கி தண்ணீரிலே கரைத்து அவர்களைக் குடிக்கவைத்தான்; அப்போதும் மோசேயின் கோபம் தணியவில்லை; **"கர்த்தரின் பட்சத்தில் நிற்கிறவர்கள் யார்?"** என்று மோசே கேட்டான். லேவி கோத்திரம் மட்டுமே கர்த்தரின் பட்சத்தில் வந்தது.

> **"கர்த்தரின் பட்சத்தில் நிற்கிறவர்கள் யார்?"** என்று மோசே கேட்டான். லேவி கோத்திரம் மட்டுமே கர்த்தரின் பட்சத்தில் வந்தது.

மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக் கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நான் எகிப்தியருக்குச் செய்ததையும், நான் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து, உங்களை என்னண்டையிலே சேர்த்துக்கொண்டதையும், நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார். (யாத் 19:3-6)

தேவன் பன்னிரெண்டு கோத்திரங்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கிக் கொண்டுவந்தார். அவர்கள் அனைவரையும் ஆசாரியர்களாக்கவேண்டும் என்பதே தேவனது திட்டமாயிருந்தது. என்றபோதிலும், ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டபோது, லேவி கோத்திரம் மாத்திரமே கர்த்தருடைய பட்சத்தில் நின்றது, எனவே ஆசாரிய ஊழியம் அவர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது. பன்னிரெண்டு கோத்திரத்தையும் கர்த்தர் அழைத்துக்கொண்டுவந்தபோதிலும், கர்த்தருடைய பட்சத்தில் நின்றதால் லேவி கோத்திரம் மட்டும் ஆசாரியக் கூட்டமாக மாறியது. தேவன் நமது யுத்தத்தை நடப்பிக்கவேண்டும் என்றால் நாம் தேவனோடு சேர்ந்துகொள்ளவேண்டும். கிறிஸ்தவர்களாக நாம் காணப்பட்டாலும், நாம் தேவனோடும் தேவ திட்டங்களோடும் இணைந்து

நிற்கிறோமா என்பதை தெரிந்துகொள்ளவேண்டும். போராட்டங்களில், யுத்தங்களில் நாம் வெற்றிபெறவேண்டுமென்றால் நாம் தேவனோடு நிற்கவேண்டும். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார் (யாக் 4:8) என்றே யாக்கோபு எழுதுகின்றார்.

சிதேக்கியாவின் தலைமையிலே நானூறு தீர்க்கதரிசிகள் இருந்தார்கள், ஆகாபும் யோசபாத்தும் தீர்க்கதரிசனம் சொல்லச்சொன்னபோது நானூறு பேரும் ஒன்றுபோலவே தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அப்பொழுது யோசபாத் ஆகாபை நோக்கி, ‘இவர்களை அல்லாமல் கர்த்தருடைய தீர்க்கதரிசி யாரும் இல்லையா?’ என்று கேட்டபோது ஆகாப் மிகாயாவை அழைத்துவரச் சொன்னான். நானூறு தீர்க்கதரிசிகளுக்கு எதிராக கர்த்தருடைய பட்சத்தில் இருந்த ஒரு தீர்க்கதரிசி நின்றுகொண்டிருந்தான். நமக்கு சாதகமான தீர்க்கதரிசனங்களையே நாம் எதிர்பார்க்கிறோம்.

நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக் கன்மலை கிறிஸ்துவே. அப்படியிருந்தும், அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்; (1கொரி 10:1-5) யோசுவாவும் காலேபும் மாத்திரமே மாத்திரம் கானானுக்குள் பிரவேசித்தார்கள்.

அமைதியாயிருப்போம்
அவரே யுத்தம் செய்கிறவர்

யோசுவா ஜனங்களை நோக்கி: நான் சொல்லும் நாள்மட்டும், நீங்கள் ஆர்ப்பரியாமலும் உங்கள் வாயினால் சத்தங்காட்டாமலும் இருங்கள்; உங்கள் வாயிலிருந்து ஒரு பேச்சும் புறப்படவேண்டாம்; ஆர்ப்பரியுங்கள் என்று உங்களுக்கு நான் சொல்லும் நாளிலே ஆர்ப்பரிப்பீர்களாக என்று கட்டளையிட்டிருந்தான்.(யோசு 6:10)

பூட்டப்பட்டதைப் போல, அடைக்கப்பட்டதைப் போல, மதில்களில் எந்த விரிசல்களும் காணப்படாதிருந்தபோதிலும். எரிகோ காணப்பட்டபோதிலும் தேவன் கிரியை செய்யத் தொடங்கிவிட்டார். கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும், உங்களைப்பற்றி எங்களுக்குத்திகில்பிடித்திருக் கிறதென்றும், உங்களைக்குறித்து தேசத்துக் குடிகள் எல்லாரும் சோர்ந்து

போனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்தசமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்குஅப்புறத்தில் சங்காரம்பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும்செய்ததையும் கேள்விப்பட்டோம் (யோசு 2:9-10) என்று ராகாப் சொல்கிறாள். எரிகோ பூட்டப்பட்டதைப் போல காட்சியளித்தாலும், உள்ளே தேவன் தனது யுத்தத்தினைத் தொடங்கியிருந்தார். அடைக்கப்பட்டிருந்தது மாத்திரமே இஸ்ரவேல் மக்களின் கண்களுக்கு தெரிந்தது. உள்ளே தேவன் யுத்தத்தைத் தொடங்கியிருந்ததை அவர்கள் காணக்கூடாதவர்களாக இருந்தார்கள். தேவன் யுத்தம் செய்ய ஆரம்பிக்காத இடத்தில் நம்மை யுத்தம் செய்ய அனுப்புவதில்லை. தேவன் யுத்தத்தை முன்னதாகவே தொடங்கியிருந்தார். நமது வெற்றிக்கு தேவன் முன்னதாகவே அஸ்திபாரம் போட்டுவிட்டார். நாம் அமர்ந்திருந்து, அமைதியாயிருந்து அவரே தேவன் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தேவன் இஸ்ரவேல் மக்களை அமைதியாக எரிகோவை சுற்றிவரப் பண்ணினார். ஒருவனது விசுவாசமில்லாத வார்த்தைகள் முழு ஜனத்தையும் கெடுத்துவிட வாய்ப்பு உண்டு என்பதை தேவன் அறிந்திருந்தார். நம்முடைய வார்த்தைகளினாலே அநேக காரியங்கள் கெட்டுப்போய்விடுகின்றன.

அப்படியே, எரிகோ பட்டணத்திலுள்ள பொன்னும், வெள்ளியும் என்னுடையது என்று தேவன் சொன்னார். அதன் பின்னதாக பிடிக்கப்பட்ட பட்டணங்களின் பொன்னையோ வெள்ளியையோ தேவன் கேட்கவில்லை. முதல் பலன் என்னுடையது என்பதை தேவன் ஜனங்களுக்கு உணர்த்தினார். உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்.(நீதி 3:10) தேவனுடைய முதற்பலனை நாம் வைத்துக்கொண்டிருந்தார் நாம் திருடர்களே. ஒரு மனிதனாகிய ஆகானின் இச்சை அவனுக்கும், சபைக்கும் தோல்வியைக் கொண்டுவந்தது.

நமக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை மறந்துவிடுகிறவரல்ல, நமக்காக யுத்தம் செய்கிறவர். நம்மை யுத்தத்திற்கு அனுப்பும் முன்னதாகவே யுத்தத்தை தொடங்குகிறவர் தேவன். நாம் அவருடைய பட்சத்தில் இருந்தால் வெற்றி நிச்சயம் நமது. அமர்ந்திருந்து அவரே தேவன் என்று நாம் அறிந்துகொண்டால், அவர் செயல்படுவதை உணர்ந்துகொண்டால் தேவன் வாக்குத்தத்தம் செய்ததை நிச்சயம் நாம் சுதந்தரித்துக்கொள்ளமுடியும். முதல் பலனினால் அவரை நாம் கனம் பண்ணினால் நம்முடைய களஞ்சியங்கள் நிரம்பும்.

❄ ❄ ❄

GEMS MEP 2011 - Registration Form

(Apply before March 31st / April 30th 2011)

Name:______________________________ Gender: M / F

Place:_______________ DOB: ___/___/_____

Phone:________________(H) __________________(M)

E-Mail: ______________________________________

Education: ____________________ (Studying/Completed)

Employment: __________________________________

Previous Work Experience: _______________________

____

Ministry Experience: ____________________________

____

Pastor's Name &Phone: __________________________

Name & Place of Church: ________________________

Have you attended GEMS Youth Camp before? Yes / No

If Yes, when and where? _________________________

Which of the following desire suits best, the purpose of your visit?

1) God has called me to be a Missionary / Pastor / Prophet / Evangelist / Bible Teacher. ☐
2) I want to spend my vacation meaningfully ☐
3) I want to meet Bro. Augustine Jebakumar ☐
4) I have a desire to visit mission fields ☐
5) I am in crossroads & want to know the plan of God ☐
6) I want to work in secular job and involve in ministry ☐
7) I want to work in secular job and support ministries ☐

What is your expectation for MEP? __________

____

____

____

____

Affix Photo or send by email.

GEMS Mission Exposure Program (MEP) 2011

1st Batch: Jun 7th to 27th **2nd Batch:** Aug 9th to 29th

Have you ever thought about the purpose of God in your Life? Are you in life's crossroads in understanding the Lord's will? Visit us in Bihar for Mission Exposure. Come and get involved in Active Evangelism and spend meaning time with missionaries.

Come and explore what the Lord has for you!

About MEP: MEP helps people to be exposed to Missions and motivates for Evangelism. **MEP** gives a platform for people to visit GEMS mission fields and actively involve in various types of ministries. Their cross cultural interaction and acquaintance with the missionaries will always be a tool for God to speak to them about His plan for them. The participants will be lead by mentors into prayer, bible studies and worship to refine their purpose in life. Bro. Augustine Jebakumar will spend exclusive time with the team to answer their questions and will share his ministry experiences.

Get ready for a Christ Centered time with GEMS Family and with Rev. Augustine Jebakumar. It is for you! **Apply immediately only 100 people will be selected.**

Age Limit: 20-35 Years
Travel : Travel cost has to be borne by you and the local stay food and transport will be borne by GEMS. The recommended train, Chennai – Dehri On Sone – Chennai is 12390 & 12389.

Send the filled registration form to the given address or email to gems@gemsbihar.org or online through http://gemsbihar.org

Coordinator - MEP 2011
GEMS, Sikaria, Indrapuri PO
Dehri On Sone (RS)
Bihar 821308
Ph: 09801285284, 09431031674, 08757088133, 06184234567

Approach the nearest GEMS Promotional Center or GEMS Volunteer for assistance.

Note: Those who consider further training to serve in North India will be offered special Mentoring Program by Bro. Augustine Jebakumar later.

IMPACT கருத்தரங்கு மற்றும் படைமுயற்சிக்கூட்டம்

தர்பங்கா

ஊழியர்களுக்கான IMPACT (**I** **M**ust **P**lant **A** **C**hurch **T**oday) கருத்தரங்கு மார்ச் 2 முதல் 4 வரையிலான மூன்று நாட்கள் பீஹாரிலுள்ள தர்பங்காவில் நடைபெற்றது. நேபாள் மற்றும் வடஇந்தியாவின் பல்வேறு மாநிலங்களின் பணித்தளங்களில் சுவிசேஷப் பணியினை நிறைவேற்றிவரும் ஜெம்ஸ் ஊழியர்கள் மற்றும் வட இந்தியாவில் சுவிசேஷப் பணி செய்துவரும் பல்வேறு ஸ்தாபனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் மற்றும் போதகர்கள் 210 பேர் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். சகோ.**அகஸ்டின் ஜெபக்குமார்** மற்றும் சிங்கப்பூரைச் சேர்ந்த சகோ.தியோ ஜிம் ஹாக், சகோ.வீ மற்றும் Dr.ஓங் சே ஹார்க் ஆகியோர் தேவ செய்தியினைப் பகிர்ந்துகொண்டனர். “More than conquerors” என்ற தலைப்பின் கீழ் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கு ஊழியர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமானதாக அமைந்தது.

மேலும், மார்ச் 5 முதல் 7 வரையிலான நாட்கள் தர்பங்காவில் படைமுயற்சிக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. இப்படைமுயற்சிக் கூட்டங்களில் சிங்கப்பூரைச் சேர்ந்த சகோ.தியோ ஜிம் ஹாக் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். உடன் வந்திருந்த சிங்கப்பூரைச் சேர்ந்த குழுவினர் வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தனர். இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் இக்கூட்டங்களில் பங்கேற்றனர். கண்பார்வை அற்றவர் பார்வை அடைந்ததும், முடவர் நடந்ததும் மேலும் அநேகர் வியாதிகளிலிருந்து விடுதலை பெற்றதும் தேவ நாமத்திற்கு மகிமையைக் கொண்டுவந்தது. பாதுகாப்பு பணிக்காக மைதானத்திற்கு வந்திருந்த காவல்துறை உதவி ஆய்வாளர் ஒருவர், செய்தியினால் தொடப்பட்டு, மேடைக்கு வந்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டதுடன், மதுப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் தர்பங்கா வாசிகளுக்காக ஜெபிக்கும்படிக்கும் வேண்டிக்கொண்டார். இரண்டாம் நாள் கூட்டத்திற்கு குடும்பமாக வருகை தந்திருந்த LJP கட்சியின் செயலாளர் மேடையில் முழங்கால் படியிட்டு ஜெபிக்கும்படி வேண்டிக்கொண்டார். பல்வேறு தடைகளின் மத்தியிலும் இக்கூட்டம் சிறப்பாக நடந்தேற கர்த்தர் துணை செய்தார்.

முகமத்கஞ்ச் மற்றும் பெத்தியா படைமுயற்சிக் கூட்டங்கள்

மார்ச் 22, 23, 24 ஆகிய நாட்கள் ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள முகமத்கஞ்ச் என்னுமிடத்தில் படைமுயற்சிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. தினமும் மாலையில் நடைபெற்ற இக்கூட்டங்களில் சுமார் 400 பேர் பங்கேற்றனர். ஜெம்ஸ் ஊழியர் சகோ. டேவிட்சிங் கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கித்தார். கூட்டத்திற்கு வந்திருந்த பல்ராம்சிங் என்பவருக்கு நீண்ட நாட்களாக இருந்துவந்த வலியினை ஜெப வேளையில் கர்த்தர் சுகமாக்கினார். ஒவ்வொரு இரவும் வியாதியஸ்தர்களுக்காக விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. சுகமடைந்த பலர் மேடையில் சாட்சி சொன்னபோது தேவ நாமம் மகிமைப்பட்டதுடன் அநேகர் விசுவாசிக்க காரணமாகவும் அமைந்தது.

அத்துடன், மார்ச் 22 முதல் 24 வரையிலான நாட்களில் பெத்தியாவில் நடைபெற்ற படைமுயற்சிக் கூட்டங்களில் தினமும் 600 பேர் பங்கேற்றனர். சென்னையைச் சேர்ந்த போதகர் ராபர்ட் சைமன் இக்கூட்டங்களில் செய்தியளித்தார். வசனத்தை கேட்க ஆர்வமுடன் கூடிவந்திருந்த மக்களில் பலர் வியாதிகள் நீங்கி சுகமடைந்தனர், பலர் அசுத்த ஆவியின் பிடியினின்று விடுதலை பெற்றதுடன், இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். இறுதி நாள் கூட்டத்தில் 28 பேர் திருமுழுக்கு பெற்றனர்.

படைமுயற்ச்சிக் கூட்டம் – தர்பங்கா

பெத்தியா கூட்டங்கள்

மசௌரி - திருமுழுக்கு ஆராதனை

IMPACT கருத்தரங்கு

படைமுயற்ச்சிக் கூட்டம் – முகமத்கஞ்ச்

மஹாராஷ்டிரா – திருமுழுக்கு ஆராதனை

தென்மண்டல தலைவர்கள் கூடுகை

GEMS POLYTECHNIC COLLEGE

Ratanpura, Aurangabad, Bihar-824121

Wanted Missionary Teachers

- By God's divine Grace GEMS has initiated the process of establishing a polytechnic college.
- It is aimed to be a center for quality education and a channel for evangelism.
- We are looking for missionaries with commitment to serve the Lord. Vacancies are available for Teaching, Non Teaching and Administrative positions.
- Qualifications for teaching positions are Diploma, Bachelor's or Master's in Engineering Degree and relevant qualifications for Non Teaching and Administrative staff.

Apply with your CV to: gems@gemsbihar.org or polytechnic@gemsbihar.org

Only one life, it will soon be past, only what's done for Christ will last!

PRESS & REGISTRATION BOOK ACT

Registration of Newspapers (Central) Rules, 1957
From IV (SEE RULE 8) Statement about
Ownership & other particulars about Newspaper

UTHA SATHAM

1. Place of Publication	58,Pon Nagaram,Tuticorin – 2.
2. Periodicity of its Publications	Monthly
3. Printer's Name	S.Jairus Ponniah at Swarnapriya Printers
Nationality	Indian 35/16A, Tiruchendur Road,Tvl -2
4. Publisher's Name	T. Samraj
Nationality	Indian
Address	No.58, Pon Nagaram,Tuticorin-2
5. Editor's Name	T. Samraj
Nationality	Indian
Address	No.58, Pon Nagaram, Tuticorin-2
6. Name and Address of shareholders holding more than one percent of the Share Capital	**GEMS Educational Media Services** No. 58, Pon Nagaram, Tuticorion - 2

Date : 28.02.2011

Sign of Publisher
T. Samraj

வெளிநாட்டினர் தொடர்புக்கு

MR. RAJADURAI
MASCUT - 0096895912309

PASTOR OSWIN MICHAEL
U.S.A. - 0012019936937

MRS. JEYANTHI E. PAUL
BAHRAIN - 0097317215968

PR. SUNDAR SAVARIMUTHU
CANADA - 0016472874853

MR. SIMON HAZLITT
KUWAIT - 009656877157

Bro. SAM
SINGAPORE - 0065 81987540

இப்பொழுது **GEMS** இணையத்தளத்திலும் **யுத்தசத்தம்** பத்திரிக்கையை பார்த்துக்கொள்ளலாம்.

இப்பொழுது சகோ. **D. அகஸ்டின் ஜெபக்குமார்** அவர்களின் தமிழ், ஹிந்தி **VCD** செய்திகளை **GEMS** இணையத்தளத்தில் காணலாம்.

www.gemsbihar.org

பணித்தளச் செய்திகள்

PEACE III கோட்டம்

ஏப்ரல் 15 புத்நகரா மீகா 2:13

போக்கடா, பூத்நகரா, பானாபூர், மீனாபூர், ராஜ்கண்ட், சிங்காசோரி, பத்தணுக்கா, நயாடோலா, பாலாசாத் ஆகிய 9 கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 3 இடங்களில் சுவிசேஷம் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கடந்து சென்றது. விசுவாசிகளுக்குக் காணப்படும் ஆவிக்குரிய தடைகள் மாற ஜெபியுங்கள்.

மோத்திகாரி மாற்கு 11:24

மட்டியாஜிராத், பெலிசராய், பெல்வனுவா, மில்கோட், பத்தௌரா ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பெல்கனுவா என்ற இடத்தில் முதன்முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. விசுவாசியான அசோக்குமாரை பெரிய விபத்திலிருந்து தேவன் அற்புதமாக பாதுகாத்தார். பிசாசின் பிடியிலிருந்த ஸ்வேதா என்ற சகோதரிக்கு தேவன் விடுதலை கொடுத்தார். இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆராதனைக்கூடம் கட்டப்பட ஜெபியுங்கள்.

ஏப்ரல் 16 நௌடான் யாக் 5:20

சுதாமாநகர், பத்துவாசௌவுக், பண்டேடோலா, பேக்கிராடோலா போன்ற இடங்களில் சுமார் 260 பேருக்கு சுவிசேஷப் புத்தகங்கள் விநியோகித்து, நற்செய்தி அறிவிக்கப்பட்டது. வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்ட சாஹேப்பாபு என்பவருக்கு தேவன் சுகத்தைக் கொடுத்தார். பின்மாற்றத்தில் உள்ளவர்கள் மீண்டும் தேவ சமுகத்தைத் தேடவும், ஆலயம் சொந்தமாக கட்டப்படவும் ஜெபியுங்கள்.

வால்மீஹிநகர் பிலி 1:5,6

5 கிராமங்களில் செய்த பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக ஆர்வமுள்ளவர்கள் புதிய ஏற்பாட்டை பெற்று படித்து வருகிறார்கள். பகஹா கிராமத்தில் முகமதியர் மக்கள் மத்தியில் இரட்சிப்பின் செய்தி கடந்து சென்றது. தரம்பூர் கிராமத்தில் ஒரு சகோதரர் தனது குடும்பத்தோடு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். திருமுழுக்குப்பெற ஆயத்தமாக இருக்கும் நௌரகியா, தரம்பூர் கிராம வீட்டுசபை விசுவாசிகளுக்காக ஜெபியுங்கள்.

ஏப்ரல் 17 பெத்தியா II தீமோ 2:26

இக்கோட்டத்தின் தலைமையிடமாக இருக்கும் இப்பணித்தளத்தில் ஆலய ஆராதனையில் சுமார் 300 பேர் கலந்து கொள்கின்றனர். பார்வக்தியாடோலா, சர்க்காவா, ஹசன்டோலா இடங்களில் சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது. அசுத்த ஆவியின் பிடியிலிருந்த கௌசல்யா ஆண்டவரால் விடுவிக்கப்பட்டார். பெண்கள் மத்தியில் ஆத்தும அறுவடையை தேவன் செய்து வருகிறார். விபத்தில் சிக்கிக்கொண்ட விரக்திராம் என்பவரின் சுகத்திற்காகவும் சிவ்பூஜன், சுக்கய்ராம் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

சுஹாடி I தெச 5:24

பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 4 குடும்பத்தார் புதிதாக சபைக்கு வருகிறார்கள். பின்மாற்றத்தில் இருந்தவர்கள் உணர்வடைந்து மீண்டும் உன்னதரின் பாதத்தில் வந்துள்ளனர். குடிபோதைக்கு அடிமையாக இருந்த அருண்குமார் அருள்நாதருக்கு அடிமையானார். பரேஹியா கிராமத்தில் விசுவாசி மதன்ராம் சபை கட்டப்பட நிலம் தருவதாக சொன்ன வாக்குறுதி விரைவில் நிறைவேற ஜெபியுங்கள்.

ஏப்ரல் 18 பைரியா எபி 7:25

